எம்.சி.ஓ.பி எண்: 1655/2020 தேதி: 25.02.2026

மசா. : 1

பெயர் : மாதவன்

த/பெ. : ஸ்ரீராமுலு

வயது : 55

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 11 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 11 ஆவணம் மட்டும் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனக்கு சொந்தமான இருசக்கரவாகனத்தில் சிபிராமசாமி ரோட்டிலிருந்து அடையார் நோக்கி சென்றுகொண்டிருந்தேன். விபத்தில் ஈடுப்பட்ட மற்றொரு வாகனம் பாஜாஜ் டூவிலர். அந்த வாகனம் எதிர்புறமாக வந்து வலது பக்கம் திரும்பியது. விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் நான்தான் கொடுத்தேன். எனக்கு எதிர்புறமாக வந்தவர் மதுபோதையில் இருந்ததாக புகாரில் கூறிருக்கிறேன் என்றால் சரி. அந்த வாகனத்தை ஓட்டியவர் இந்த வழக்கில் 3 வது எதிர்மனுதாரர் என்றால் சரி. 3 ம் எதிர்மனுதாரர் தான் விபத்து சமயத்தில் அவர்தான் வாகனத்தின் உரிமையாளர் 1 ம் எதிர்மனுதாரர் மனுதாக்கல் செய்ததன் பெயரில் அவரை இந்த வழக்கில் 3 ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். அடிப்பட்ட உடன் ராயப்பேட்டை மருத்துவமனையில் முதல் உதவி பெற்று பின் செட்டிநாடு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு உள்நோயாளியாக ஒருவாரம் இருந்தேன். கையில் தகடு 16.03.2020 அன்று வைக்கப்பட்டது. எனக்கு மருத்துவ காப்பீடு இல்லை. மருத்துவ செலவை நான் எந்த ஒரு மருத்துவகாப்பீடு மூலம் திரும்ப பெறவில்லை. எதிர்கால மருத்துவ செலவு Spine and gynae மசாஆ 11 தாக்கல் செய்யப்பட்டுள்ளதுஎன்றால் சரி. அந்த மசாஆ 11– 11.07.2020 என குறிப்பிட்டுள்ளது. 11.07.2020 அன்று வைத்த பிளேட்டை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டு அதற்கான தோரயா மருத்துவ செலவு ரூபாய் 1,10,000/– என குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று வரை அந்த பிளேட்டை எடுக்கவில்லை. செட்டி நாடு மருத்துவமனையில் வலி வந்தால் பிளேட்டை எடுக்கலாம் என்றும் இல்லை என்றால் அதுவே

சரியாகிவிடும் என்று கூறினார்கள். இன்றுவரை பிளேட்டை எடுக்கவில்லை. மசாஆ 11 ஆவணம் எதிர்கால செலவிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதனால் அந்த தொகை எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய தொழில், வருமானத்திற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்சரி. 2021 வருடத்திற்கு பிறகு தொடர்சிகிச்சையும் எடுக்கவில்லை என்றால் சரி. மனு, பிரமாணாவாக்குமூலத்தில் கூறியவாறு எனக்கு ஊனமோ, பாதிப்போ இல்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகைக்கான ஆவணம் தாக்கல் செய்யாததால் அந்த தொகைகள் கிடைக்கதக்கல்ல என்றால் சரியல்ல. வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநரான 3ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் மதுபோதையில் சட்டத்திற்கு புறம்பாக வண்டியை ஓட்டியதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு 2ம் எதிர்மனுதாரர் பொறுத்தவரை மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.